www.StudyGuideIndia.com

**8258**

Register Number

**Part III**

# வரலாறு / HISTORY

( Tamil Version )

நேரம் : 3 மணி ]  [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

*குறிப்பு :* அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 45 × 1 = 45

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக :

1. இரண்டாம் மைசூர் போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்படிக்கை

அ) சால்பாய்

ஆ) மங்களூர்

இ) புரந்தர்

ஈ) மைசூர்.

2. காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்தியது

அ) மகல்வாரி முறை

ஆ) நிலையான நிலவரித்திட்டம்

இ) இரயத்துவாரி முறை

ஈ) ஜாகீர்தாரி முறை.

[ Turn over

www.StudyGuideIndia.com

3. பசீன் உடன்படிக்கை கையெழுத்தாகிய ஆண்டு

அ) 1802

ஆ) 1812

இ) 1822

ஈ) 1832.

4. ஹேஸ்டிங்ஸ் பிரபு நேபாளத்தின் மீது போர் தொடுத்த ஆண்டு

அ) 1814

ஆ) 1815

இ) 1816

ஈ) 1817.

5. 'சதி' வழக்கம் இவரது ஆட்சிக்காலத்தில் ஒழிக்கப்பட்டது

அ) வாரன்ஹேஸ்டிங்ஸ்

ஆ) காரன்வாலிஸ் பிரபு

இ) வெல்லெஸ்லி பிரபு

ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு.

6. எந்த மாகாண ஆட்சிக்கு லாரன்ஸ் சகோதரர்கள் சேவையாற்றினார்கள் ?

அ) பர்மா

ஆ) பஞ்சாப்

இ) வங்காளம்

ஈ) மைசூர்.

www.StudyGuideIndia.com

7. இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் ?

அ) காரன்வாலிஸ் பிரபு

ஆ) சர் தாமஸ் மன்றோ

இ) டல்ஹவுசி பிரபு

ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு.

8. ஜோனாதன் டங்கன் வடமொழிக் கல்லூரியை நிறுவிய இடம்

அ) சென்னை

ஆ) பம்பாய்

இ) கல்கத்தா

ஈ) பனாரஸ்.

9. பின்வருபவர்களில், 1857 ஆம் ஆண்டு கலகத்தை முதல் இந்திய விடுதலைப் போர் என்று கருதியவர் யார் ?

அ) சர் ஜான் லாரன்ஸ்

ஆ) வீரசவார்க்கர்

இ) எஸ். என். சென்

ஈ) ஆர். சி. மஜூம்தார்.

10. நாட்டுமொழி செய்தித்தாள் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது ?

அ) 1878

ஆ) 1882

இ) 1898

ஈ) 1902.

www.StudyGuideIndia.com

11. ஆரிய சமாஜத்தை நிறுவியவர்

அ) இராஜா ராம்மோகன் ராய்

ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதி

இ) சுவாமி விவேகானந்தர்

ஈ) எம். ஜி. ரானடே.

12. முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1906

ஆ) 1909

இ) 1916

ஈ) 1926.

13. சௌரி சௌரா நிகழ்ச்சி நடைபெற்ற ஆண்டு

அ) 1920

ஆ) 1921

இ) 1922

ஈ) 1923.

14. இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்

அ) சீனுவாசபிள்ளை

ஆ) லட்சுமி நரசுசெட்டி

இ) ரங்கைய நாயுடு

ஈ) ஜி. சுப்ரமணிய அய்யர்.

15. பின்வருவனவற்றுள் ஈ.வெ.ரா. பெரியார் தொடங்காத பத்திரிக்கை எது ?

அ) குடியரசு

ஆ) புரட்சி

இ) விடுதலை

ஈ) சுயராஜ்யா.

www.StudyGuideIndia.com

16. இந்திய ஒன்றியத்தில் சேரமறுத்த அரசு

அ) ஹைதராபாத்

ஆ) மைசூர்

இ) ஜெய்பூர்

ஈ) திருவாங்கூர்.

17. பின்வருபவர்களில் அரசியலமைப்புக் குழுவிற்கு தலைவராக இருந்தவர் யார் ?

அ) டாக்டர் அம்பேத்கார்

ஆ) டாக்டர் இராஜேந்திர பிரசாத்

இ) கே. எம். பணிக்கர்

ஈ) ஜவஹர்லால் நேரு.

18. பின்வருபவர்களில் நவீன அறிவியலின் தந்தை என்று கருதப்படுபவர் யார் ?

அ) கோபர்நிகஸ்

ஆ) பிரான்சிஸ் பேகன்

இ) கெப்ளர்

ஈ) நியூட்டன்.

19. பயிர் சுழற்சி முறையை அறிமுகப்படுத்தியவர்

அ) ஹார்வி

ஆ) டவுன்ஷெண்ட்

இ) மெக்காடம்

ஈ) ஹார்கிரீவ்ஸ்.

20. ஐ. நா. சபையின் தலைமையிடம் அமைந்துள்ளது

அ) ஜெனீவா

ஆ) தி ஹேக்

இ) நியூயார்க்

ஈ) சான் பிரான்சிஸ்கோ.

www.StudyGuideIndia.com

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக :

21. வேலூர் சிப்பாய் கலகம் தோன்றிய ஆண்டு .................. .

22. நவீன அஞ்சல் முறையை தொடங்கி வைத்தவர் .................. .

23. ஹிடாகாரிணி சபையை அமைத்தவர் .................. .

24. பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுத்த தளபதி .................. .

25. முதலாவது பஞ்ச நிராவரணக்குழு .................. தலைமையில் ஏற்படுத்தப்பட்டது.

26. பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையில் உறுப்பினரான முதல் இந்தியர் .................. .

27. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ..................

28. அமெரிக்க விடுதலைப்போர் .................. உடன்படிக்கைப்படி முடிவுக்கு வந்தது.

29. பன்னாட்டு கழகம் நிறுவப்பட்ட ஆண்டு .................. .

30. நியூயார்க் நகரத்திலிருந்த உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் தீவிரவாதிகளால் தாக்கப்பட்ட ஆண்டு .................. .

III. நிரல் 'அ' வின் கீழ் உள்ளவற்றை நிரல் 'ஆ' உடன் பொருத்துக.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 31. சரபோஜி | அ) பாபா தயாள் தாஸ் |
| 32. நிரங்காரி இயக்கம் | ஆ) 1932 |
| 33. பூனா ஒப்பந்தம் | இ) நாசிசம் |
| 34. பயங்கர ஆட்சி | ஈ) தஞ்சாவூர் |
| 35. ஹிட்லர் | உ) ரோபஸ்பியர். |

www.StudyGuideIndia.com

IV. 36. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) வெல்லெஸ்லி பிரபு வாரிசு இழக்கும் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.

ஆ) வாரிசு இழக்கும் கொள்கை சட்டப்பூர்வமாகக் கருதப்பட்டது.

இ) கீழ் பர்மாவை இணைப்பதற்கு வாரிசு இழப்புக் கொள்கை பயன்படுத்தப்பட்டது.

ஈ) 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்குப்பின் வாரிசு இழக்கும் கொள்கை திரும்பப் பெறப்பட்டது.

37. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) வட இந்தியாவின் அரசியலில் பாளையக்காரர்கள் வலிமை பெற்று விளங்கினர்.

ஆ) யூசுப்கான், கான்சாகிப் என்றும் அழைக்கப்பட்டார்.

இ) சிவசுப்ரமணிய பிள்ளை, மருது பாண்டியரின் அமைச்சர்.

ஈ) தென்னிந்திய கூட்டிணைவு ஊமைத்துரையின் தலைமையில் அமைக்கப்பட்டது.

38. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) லிட்டன் பிரபுவின் ஆப்கானிய கொள்கையை பின்பற்றும்படி ரிப்பன் பிரபு அறிவுறுத்தப்பட்டார்.

ஆ) நாட்டுமொழி செய்தித்தாள் சட்டத்தை ரத்து செய்து இந்தியர்களிடையே ரிப்பன் பிரபு புகழ் பெற்றார்.

இ) ரிப்பன் பிரபு கல்வி சீர்திருத்தங்களில் சொற்ப கவனமே செலுத்தினார்.

ஈ) 1882-ல் ரிப்பன் பிரபு தொழிற்சாலை சட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

[ Turn over

www.StudyGuideIndia.com

39. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) அமெரிக்கா பன்னாட்டுக் கழகத்தில் உறுப்பினராகவில்லை.

ஆ) உலகப்போரை தடுப்பதில் பன்னாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இ) ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்காமல் பன்னாட்டுக் கழகம் தடுத்தது.

ஈ) பன்னாட்டுக் கழகத்தின் முடிவுகளை ஹிட்லரும் முசோலினியும் மதித்து நடந்தனர்.

40. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) 1990 ல் மைக்கேல் கோர்பசேவ் சோவியத் யூனியனின் அதிபராகப் பொறுப்பேற்றார்.

ஆ) கோர்பசேவ்வின் பொருளாதாரக் கொள்கை தனியார் உடைமையை விமர்சித்தது.

இ) 'கிளாஸ்நாட்ஸ்' என்ற பெயரில் அவர் பல அரசியல் சீர்திருத்தங்களை கொண்டு வந்தார்.

ஈ) 1995 ல் அவர் சோவியத் யூனியன் ( USSR ) அதிபர் பதவியிலிருந்து விலகினார்.

V. கீழ்க்காணும் கூற்றுகளில் எது **சரி**, எது **தவறு** என்பதனைக் குறிப்பிடுக.

41. வில்லியம் பெண்டிங் பிரபு கல்கத்தா மருத்துவக் கல்லூரியை நிறுவினார்.

42. வாரன்ஹேஸ்டிங்ஸ் பம்பாயில் ஒரு மதரசாவை நிறுவினார்.

43. லிட்டனது ஆட்சி இந்தியாவில் தேசியம் தோன்ற வழிவகுத்தது.

44. பெரியார் ஈ.வெ.ரா. வைக்கம் சத்தியாகிரகத்தை தொடங்கினார்.

45. டிசம்பர் 13, 2000 ல் இந்திய பாராளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஆ

VI. *குறிப்புகள் :* i) ஏதேனும் பதினைந்து வினாக்களுக்கு மட்டும் சிறுகுறிப்பு வரைக.

ii) ஒவ்வொன்றிற்கும் மூன்று குறிப்புகள் அளித்தல் வேண்டும்.

15 × 3 = 45

46. பிட் இந்திய சட்டம்

47. மெக்காலே பிரபு

48. வுட் அறிக்கை

49. பெண் சிசுக்கொலை

50. சர் ஜான் கிரடாக்

51. நானா சாகிப்

52. ஹண்டர் குழு

53. தாதாபாய் நௌரோஜி

54. சூரத் பிளவு

55. கிலாபத் இயக்கம்

56. வேதாரண்யம் யாத்திரை

57. இட ஒதுக்கீட்டு அரசு ஆணை

58. பாளையக்காரர் முறை

59. பஞ்ச சீலம்

60. இயேசு சபை

[ Turn over

www.StudyGuideIndia.com

61. முத்திரைத்தாள் சட்டம்

62. ஜான் மெக்காடம்

63. குருதி ஞாயிறு

64. ரோம் - பெர்லின் - டோக்கியோ அச்சு

65. கெடுபிடிப்போர்.

## பகுதி - இ

VII. *குறிப்புகள் :* i) பின்வருவனவற்றில் ஏதேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. அவற்றில் வினா எண் **77**-க்கு **கட்டாயமாக** விடையளித்தல் வேண்டும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

10 × 6 = 60

66. அ) ஒழுங்குமுறை சட்டத்தின் முக்கிய விதிமுறைகள் பற்றி விவாதிக்க.

*அல்லது*

ஆ) காரன்வாலிஸ் பிரபுவின் நீதித்துறை சீர்திருத்தங்களை ஆய்க.

67. அ) பிண்டாரிகளை ஒழிக்க ஹேஸ்டிங்ஸ் பிரபு மேற்கொண்ட நடவடிக்கைகளை விவாதிக்க.

*அல்லது*

ஆ) 1833 ஆம் ஆண்டு பட்டயச்சட்டத்தின் முக்கிய பிரிவுகளை விவாதிக்க.

www.StudyGuideIndia.com

68. அ) வாரிசு இழக்கும் கொள்கையின் கருத்து மற்றும் நடைமுறை பற்றி எழுதுக.

அல்லது

ஆ) நிலையான நிலவரித்திட்டத்தின் சிறப்புக் கூறுகளை குறிப்பிடுக.

69. அ) 1801 ஆம் ஆண்டு தென்னிந்திய கலகத்தைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

அல்லது

ஆ) 1857 ஆம் ஆண்டு பெருங்கலகத்தின் விளைவுகளை ஆய்க.

70. அ) லிட்டன் பிரபுவின் பஞ்ச நிவாரணக் கொள்கையைப் பற்றி குறிப்பு வரைக.

அல்லது

ஆ) இராமலிங்க அடிகளின் கொள்கைகளை விவரி.

71. அ) சுதேசி இயக்கத்தின் முக்கியத்துவம் யாது ?

அல்லது

ஆ) ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக.

72. அ) தேசிய இயக்கத்தில் வ. உ. சி. யின் பங்கினைப் பற்றி விவாதிக்க.

அல்லது

ஆ) நீதிக்கட்சியின் கல்வி சீர்திருத்தங்களை விவரி.



www.StudyGuideIndia.com

73. அ) இந்திய விடுதலைச் சட்டத்தின் பிரிவுகளை ஆய்க.

*அல்லது*

ஆ) இந்திய அயலுறவுக் கொள்கையின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

74. அ) மறுமலர்ச்சியின் விளைவுகளை ஆய்க.

*அல்லது*

ஆ) சமய சீர்திருத்தத்தின் விளைவுகளை மதிப்பிடுக.

75. அ) தொழிற் புரட்சிக்கான காரணங்களை ஆய்க.

*அல்லது*

ஆ) பன்னாட்டுக் கழகம் அமைக்கப்பட்டதை தொகுத்துக் கூறுக.

76. அ) இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் யாவை ?

*அல்லது*

ஆ) மாசே துங் பற்றி ஒரு குறிப்பு வரைக.

77. அ) ஐ. நா. சபையின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

*அல்லது*

ஆ) அணு ஆயுதப்பரவல் தடைச் சட்டத்தின் முக்கியக் கூறுகளை கூறுக.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

VIII. குறிப்புகள் : i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக. அவற்றுள் வினா எண். **84**-க்கு கட்டாயமாக விடை தருதல் **வேண்டும்.**

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

5 × 10 = 50

78. அ) வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்களை தொகுத்துக் கூறுக.

*அல்லது*

ஆ) 'பெண்டிங் பிரபு சமூக சீர்திருத்தங்கள் காலத்தை தொடங்கி வைத்தார்' - கருத்து கூறுக.

79. அ) டல்ஹவுசி பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.

*அல்லது*

ஆ) 1806 ஆம் ஆண்டு வேலூர் சிப்பாய் கலகத்துக்கான காரணங்களை ஆய்க.

80. அ) 'இராஜாராம் மோகன் ராய் இந்திய மறுமலர்ச்சியின் தந்தை' - விவாதிக்க.

*அல்லது*

ஆ) இந்தியாவில் தேசியம் தோன்றுவதற்கான காரணங்களை ஆய்க.

[ Turn over

www.StudyGuideIndia.com

81. அ) இந்திய விடுதலை இயக்கத்தில் மகாத்மா காந்தியின் பங்கினை மதிப்பிடுக.

*அல்லது*

ஆ) 'ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பி' எனக் கருதப்படுகிறார்' கருத்துக் கூறுக.

82. அ) சமய சீர்திருத்தத்திற்கான காரணங்களை ஆய்க.

*அல்லது*

ஆ) இரண்டாம் உலகப்போருக்கான காரணங்களைக் கூறுக.

83. அ) உலக அமைதியைக் காப்பதில் ஐ.நா. சபையின் பங்கினை மதிப்பிடுக.

*அல்லது*

ஆ) உலகளாவிய பயங்கரவாதத்தின் தாக்கத்தை மதிப்பிடுக.

84. அ) இந்திய வரைப்படத்தில் கீழ்கண்ட ஐந்து இடங்களை சுட்டிக் காட்டுக :

i) மைசூர்

ii) அயோத்தி

iii) தஞ்சாவூர்

iv) ஜான்சி

v) சூரத்.

டல்ஹெவுசி பிரபுவின் ஆங்கிலேயப் பகுதிகளை சுட்டிக் காட்டுக.

*அல்லது*

www.StudyGuideIndia.com

ஆ) 1900 முதல் 1950 வரை நடைபெற்ற விடுதலைப் போர் நிகழ்ச்சிகளில் ஐந்தினைக் காலக்கோடு காட்டி வரைக.

அல்லது

இ) முதல் உலகப்போரின் முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் குறிக்கும் காலக்கோட்டினை வரைக.

www.StudyGuideIndia.com

www.StudyGuideIndia.com